**அ.வ.எண். 287/2023**
**பி.வா.சா.1 : சக்திவேல்**
**தேதி : 26.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டேன். வழக்கில் சொல்லியுள்ள சொத்து விவரங்கள் சரிதான். தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் முத்துசாமிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டவை என்று சொன்னால் சரிதான். அவருக்கு அவை பூர்வீகமாக பாத்தியப்பட்டவையாகும். முத்துசாமிக்கவுண்டருக்கு கந்தசாமி, கிருஷ்ணசாமி, செல்லம்மாள், பாப்பாத்தி ஆகிய நான்கு பேர் வாரிசுகள் ஆவார்கள். முத்துசாமிக்கவுண்டர் இறக்கும்போது எந்த ஒரு ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார். முத்துசாமிக்கவுண்டர் இறந்தபிறகு 1984 ஆம் ஆண்டு வாய்மொழியாக கந்தசாமி, கிருஷ்ணசாமி, செல்லம்மாள், பாப்பாத்தி ஆகியோர் பிரித்துக்கொண்டனர். வாய்மொழியாகவோ, எழுத்துப்பூர்வமாகவே இதுவரை ஆவணம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான் இதுநாள்வரை மேற்சொன்ன கந்தசாமி, கிருஷ்ணசாமி, செல்லம்மாள், பாப்பாத்தி ஆகிய நால்வரும் கூட்டாக அனுபவித்து வருகிறோம். உங்களுக்கு இறந்தபோன செல்லம்மாள், பாப்பாத்தி ஆகியோர் விடுதலை பத்திரம் எழுதி வைத்ததை இன்று வரை நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. கொஞ்சம் கொஞ்சமாக 5, 6 லட்ச ரூபாய் கொடுத்து விடுதலை ஆவணம் எழுதிவாங்கியுள்ளேன். விடுதலை

ஆவணம் எழுதிய தேதியில் 2 லட்ச ரூபாய் கொடுத்திருப்பேன். விடுதலை ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்படவில்லைஎன்றும் அதில் வாதிக்கும் சரிசமமாக பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 30 வருடங்களாக நான் தான் தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறேன். 21.12.2022 ஆம் தேதியில் விடுதலை ஆவணம் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. நீங்கள் சொல்வது போல் தாவா சொத்திற்கு நீங்கள் முழு உரிமையாளர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிக்கும் உங்களுக்கும் சரிசமமாக பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் உங்கள் உடன்பிறந்த சகோதரிகள் என்று சொன்னால் சரிதான். வாதிகள் கோரியபடி வழக்கு தீரப்பாக வேண்டும் என்ற சொன்னால் சரியல்ல 12ல் 1 பாகம் வழங்கப்பட வேண்டும். நீங்கள் பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.26 18:29:12 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.